

பாமாலை 312 B சிலுவை தாங்கு

1 சிலுவை தாங்கு மீட்பர் பின்
அவரின் சீஷனாகவே
வெறுப்பாய் உன்னை லோகத்தை
பின் செல்வாய் தாழ்மையாகவே

2 சிலுவை தாங்கு பாரத்தால்
கோழை நெஞ்சோனாய் அஞ்சிடாய்
விண் பலம் உன்னைத் தாங்கிடும்
வல்லமை வீரம் பெறுவாய்

3 சிலுவை தாங்கு மேட்டிமை
கொள்ளாய் எந்நிந்தை எண்ணிடாய்
நீ பாவம் சாவை மேற்கொள்ள
உன் மீட்பர் மாண்டார் ஈனமாய்

4 சிலுவை தாங்கி கிறிஸ்துவை
பின் செல்வாய் ஆயுள் முற்றுமே
மகிமை கிரீடம் சூடுவாய்
சிலுவை தாங்கின் மட்டுமே

5 திரியேகரான மா கர்த்தா
என்றென்றும் போற்றப்படுவீர்
மேலாக நித்திய வாழ்வுக்கே
அடியாரை நடத்துவீர்